# வைப்பகம்

2019 சனவரி - மாச்சு மலர் 4 இதழ் 01 - 03

அறிவுத் தேடலின் மையம்

# தரவுகள் பேசட்டும்

ரூ. 20/-

ISSN 2513-3012
01913
9 770041 001427


இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்

# தரவுகள் பேசட்டும்

## 1. 2018இல் ரூபாவிற்கு பலத்த அடி


இலங்கை ரூபாவின் அடிப்படையில் ஐ.அ.டொலரின் பெறுமதியானது 2018இன் ஆரம்பத்தில் காணப்பட்ட ஏறத்தாழ ரூ.153.50இலிருந்து மேல் நோக்கி அதிகரித்து 2018இன் மூன்றாம் காலாண்டுப்பகுதியின் ஆரம்பத்தில் ரூ.161இனை தாண்டியதுடன் அதற்குப் பிறகு வேகமாக அதிகரித்து 2018 நவெம்பர் மாதமளவில் விரைவாக மேல் நோக்கி ரூ.175இற்குச் சென்றதுடன் 2019 சனவரி மாதமளவில் மேலும் ரூ.180இற்கு அதிகரித்ததுடன், இலங்கை மத்திய வங்கியினால் நாட்டின் செலாவணி வீதக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகின்றமையினால், இலங்கை மத்திய வங்கியின் சில முக்கிய செயன்முறைகள் மீண்டும் கூர்மையான கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

**2000ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.அ.டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் தேய்வு (-)/ உயர்வு (+)**



அடிப்படைப் பேரண்டப் பொருளாதார கோட்பாடுகளினைப் பிரதிபலிக்கின்றவாறு செலாவணி வீத அசைவிற்கு இடமளிக்கின்ற வேளையில், இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் உயர்ந்த அளவிலான தளம்பலினைத் தடுப்பதற்கு 2018இல் இலங்கை மத்திய வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி வீதச் சந்தையில் தலையிட்டது. இதன் விளைவாக, அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகள் சரிவடைந்தன. எவ்வாறாயினும், அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு கடன்பாடுகள் சார்பான மீளச்செலுத்துகை கடமைகளை சரியான நேரத்தில் இலங்கை மத்திய வங்கியானது தொடர்ந்தும் பூர்த்திசெய்து வந்துள்ளது.


**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்**





தரவு மூலங்கள்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017, சிறப்பு புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணை 5. ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள், வெளிநாட்டுக் கடன் மற்றும் செலாவணி வீதங்கள்; மற்றும் வாராந்தப் பொருளாதாரக் குறிகாட்டிகள், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளம்

ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் சபையின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் தளர்வின் விளைவாக சர்வதேச சந்தையில் இறுக்கமான நாணய நிலைமைகளினூடாக இலங்கை ரூபாய் உட்பட பல்வேறு நாடுகளுடைய நாணயங்களின் வெளிநாட்டுப் பெறுமதி ஒரு குறிப்பிட்ட சரிவினைப் பதிவுசெய்தமையினை 2018ஆம் ஆண்டில் காணக்கூடியதாக இருந்தது. இலங்கை உட்பட சில தேர்வு செய்யப்பட்ட நாணயங்களுக்கான 2018ஆம் காலப்பகுதியிலான போக்கினை கீழ் காணப்படுகின்ற தரவுகள் காட்டுகின்றன.


**2018இல் ஐ.அ.டொலரிற்கெதிராக இலங்கை ரூபா மற்றும் ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களினுடைய உயர்வு/ தேய்வு**



## 2018இல் ஐ.அ.டொலரிற்கெதிராக இலங்கை ரூபா மற்றும் ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களினுடைய உயர்வு/ தேய்வு




## 2018இல் ஐ.அ.டொலரிற்கெதிராக இலங்கை ரூபா மற்றும் ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களினுடைய உயர்வு/ தேய்வு





செலாவணி வீதங்களின் தரவு மூலம்: பன்னாட்டு நாணய நிதிய வெப்தளம்

## 2. ஆனால், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2017இல் பதிவு செய்யப்பட்ட உயர்மட்டத்திலிருந்து 2018இல் மேலும் அதிகரித்தது

வெளிநாட்டுப் பக்கத்தில் சில வேறுவிதமான அண்மைக்கால அபிவிருத்திகள் இலங்கைக்கான பொருளாதாரத்தினைப் பற்றி சிறப்பாக முன்கூட்டியே அறிவிக்கின்றன. உதாரணமாக, வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2017 மற்றும் 2018 காலப்பகுதிகளில் ஒரு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்களைக் காண்பித்தன. எந்தவித சந்தேகத்திக்கிடமின்றி, காணப்பட்ட பேரண்டப் பொருளாதார நிலைமைகள் இந்த வகையிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களை கவர்வதற்கு ஒரு பங்கினை வகித்திருந்தன.

**இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் (தேறிய நியதிகளில்)**





தரவு மூலங்கள்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017, சிறப்பு புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணை 4, சென்மதி நிலுவை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளம்


# 3. 2018இல் ஏற்றுமதிகளும் மேலும் அதிகரித்தன

இலங்கை ரூபாவின் செலாவணி வீதமானது சந்தைக் காரணிகளால் தீர்மானிக்கப்படுவதற்கு இலங்கை மத்திய வங்கி இடமளித்திருந்த வேளையில், மறுபுறமாக இது இலங்கையின் ஏற்றுமதியின் விலையிடலினை போட்டித்தன்மையாக நிலைத்திருக்கச் செய்வதனை நிச்சயப்படுத்தியிருந்தது. ஏற்றுமதி வருவாய்கள் ஒரு அதிகரிப்பினை பதிவுசெய்ததுடன் அண்மைய ஆண்டுகளில் பெரும்பாலான ஏற்றுமதிகளின் துணைத்துறைகளும் வருவாய்களில் ஒரு அதிகரித்த போக்கினைப் பதிவு செய்தன.

மொத்த ஏற்றுமதிகள்





வேளாண்மை ஏற்றுமதிகள்





வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி வருவாய்களில் தேயிலையானது தொடர்ந்தும் முதன்மை மூலமாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், கடந்த காலங்களில் பல்வேறு ஏனைய வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி வருவாய்கள் படிப்படியாக அதிகரித்திருந்தன.


தேயிலை ஏற்றுமதிகள்





வாசனைத்திரவியங்களின் ஏற்றுமதிகள்




## காய்கறிகள் ஏற்றுமதிகள்




## கடலுணவு ஏற்றுமதிகள்





## தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகள்





கைத்தொழில் ஏற்றுமதிகள் கடந்த ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்திருந்த வேளையில், வணிக ரீதியான ஏற்றுமதிகளுக்குள் புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் உயர்வான ஏற்றுமதி வருவாய் மூலமாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், பல்வேறு ஏனைய கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக அதிகரித்திருந்தன.


## கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகள்




### புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகள்





### தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகளின் ஏற்றுமதிகள்





### இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகள்





### பிளாத்திக்கு மற்றும் பிளாத்திக்குப்பொருட்களின் ஏற்றுமதிகள்





### உணவு மற்றும் குடிபானங்களின் ஏற்றுமதிகள்





### அடிப்படை உலோகங்கள் மற்றும் உலோகப்பொருட்களின் ஏற்றுமதிகள்



**பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்களின் ஏற்றுமதிகள்**




**மரம் மற்றும் தாள் உற்பத்திகளின் ஏற்றுமதிகள்**





ஏற்றுமதிகள் தொடர்பான தரவு மூலங்கள்: இலங்கை மத்திய வங்கியின் வெப்தளம்

## 4. எங்களுடைய கொள்கைகள் சிறப்பாக இறக்குமதிகளை முகாமைப்படுத்த உதவியது


இறக்குமதிகளைக் கவனத்திற்கொள்ளும் போது, இலங்கை மத்திய வங்கியினால் அண்மைக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகள், உள்ளீட்டுப்பொருட்கள், முதலீட்டுப்பொருட்கள் மற்றும் ஒரு சில வகையான நுகர்வுப்பொருட்கள் போன்ற முக்கிய பொருட்களின் இறக்குமதிகளில் உறுதியற்ற நிலைமையினை உருவாக்காது குறித்த பெறுபேற்றினை அடைந்ததாக கிடைக்கப்பெறும் தரவுகள் பரிந்துரைக்கின்றன.

இது பின்வரும் தரவுகளிலும் காணக்கூடியதாகவுள்ளது. அவ்வகையிலான ஒரு கொள்கை வழிமுறையாக 2018 செத்தெம்பர் இறுதியிலிருந்து 2019ஆம் ஆண்டு மாச்சு ஆரம்பம் வரை நடைமுறையிலிருக்கும் விதத்தில் பொதுவாக வியாபார நோக்கமற்ற உபயோகத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற மோட்டார் ஊர்திகளின் இறக்குமதியின் மீது ஒழுக்கவிதிக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டிருந்தது.


**ஊர்திகள் நீங்கலாக நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம்**




### ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம்





### மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்





### எரிபொருள் நீங்கலாக இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்





### எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம்




## முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம்





## கட்டடப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம்




## பொறி மற்றும் சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம்




## போக்குவரத்துச் சாதனங்களின் மீதான இறக்குமதிச் செலவினம்





இறக்குமதிகள் தொடர்பான தரவு மூலங்கள்: இலங்கை மத்திய வங்கியின் வெப்தளம்

# 5. கொடுகடன் உற்சாகமாகவும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவும் காணப்படுகின்றது


இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள் காரணமாக ஏற்பட்ட பேரண்டப் பொருளாதார விளைவுகளின் அடிப்படையில், வங்கித்தொழில் துறையின் கொடுகடன் பாய்ச்சல்கள் மற்றும் செயலாக்கமற்ற கடன்களின் அசைவுகள் வேளாண்மை மற்றும் கைத்தொழில் ஆகிய இரண்டு பொருளாதார நடவடிக்கைகளும் தொடர்ந்தும் உற்சாகமாக இருந்தமையினைக் குறித்துக்காட்டுகின்றது. மறுமுனையாக, தனியாள் கடன்களாகவும் மற்றும் முற்பணங்களாகவும் வங்கிகளால் வழங்கப்பட்டுள்ள கொடுகடன் வசதிகளின் உற்சாகத்திற்கு ஆதரவளித்திருப்பதாக அமைந்திருந்தது.

**வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்**




தரவு மூலம்: தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் கடன்கள் மற்றும் முற்பணங்கள், மாதாந்தச் செய்தித்திரட்டு, பல்வேறுபட்ட வெளியீடுகள், மத்திய வங்கியின் வெப்தளம்


**தனியார் துறையிலான கொடுகடன் வளர்ச்சி மற்றும் செயற்படாக் கடன்கள்**




தரவு மூலங்கள்: மத்திய வங்கியின் வெப்தளம்

கொடுகடன் பாய்ச்சல்கள் மற்றும் செயலாக்கமற்ற கடன் வசதிகளின் போக்குகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதார நடவடிக்கைகளின் அசைவுகள் மின்சார விற்பனைகளின் (மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்ற பொருளாதார நடவடிக்கைகளின் அசைவினைக் காண்பதற்கு பொதுவாக ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது) அசைவுகளுடன் ஒத்திருந்தது. இது பின்வரும் தரவுகளில் காணக்கூடியதாகவுள்ளது.


மின்வலு விற்பனைகள் (ஜிகாவற் மணித்தியாலங்கள்)
ஆண்டிற்கு ஆண்டு மாற்றம் (% )





தரவு மூலம்: ஆண்டறிக்கைகள் மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், பல்வேறுபட்ட வெளியீடுகள், மத்திய வங்கியின் வெப்தளம்

இதேவேளையில், 2018 செத்தெம்பரிலுள்ளவாறான (அண்மைய தரவுகள் கிடைக்கப்பெறும் காலம்) தனியார் துறையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் வசதியினை 5 ஆண்டுகளுக்கு முன்னரான காலப்பகுதியுடன் (அதாவது 2013 செத்தெம்பர்) ஒப்பிடுகையில், கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்களின் சார்பளவிலான பங்கானது ஒரு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில் பணிகள் துறையின் பங்கும் அதிகரித்திருந்தது. கைத்தொழில் துறையினுள், கட்டடவாக்கத் துறையின் சார்பளவிலான பங்கும் இந்தக் காலப்பகுதியில் அதிகரித்திருந்தது.


**2013 செத்தெம்பரிலுள்ளவாறு வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்**





**2018 செத்தெம்பரிலுள்ளவாறு வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்**




### 2013 செத்தெம்பரிலுள்ளவாறு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்கள்





### 2018 செத்தெம்பரிலுள்ளவாறு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தனியாள் கடன்கள் மற்றும் முற்பணங்கள்





### 2013 செத்தெம்பரிலுள்ளவாறு வர்த்தக வங்கிகளினால் பணிகள் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்





### 2018 செத்தெம்பரிலுள்ளவாறு வர்த்தக வங்கிகளினால் பணிகள் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்





### 2013 செத்தெம்பரிலுள்ளவாறு வர்த்தக வங்கிகளினால் வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்





### 2018 செத்தெம்பரிலுள்ளவாறு வர்த்தக வங்கிகளினால் வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்



2013 செத்தெம்பரிலுள்ளவாறு வர்த்தக வங்கிகளினால் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்




2018 செத்தெம்பரிலுள்ளவாறு வர்த்தக வங்கிகளினால் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்





தரவு மூலம்: தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் கடன்கள் மற்றும் முற்பணங்கள், மாதாந்தச் செய்தித்திரட்டு, பல்வேறுபட்ட வெளியீடுகள், மத்திய வங்கியின் வெப்தளம்

## 6. ஆனால், சவால்விடுகின்ற உலகளாவிய பொருளாதார நிலைமைகள் மீது கவனம் தேவைப்படுகின்றது

இலங்கை மத்திய வங்கியானது தன்னுடைய விலை உறுதிப்பாடு குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான கருவிகளான சந்தை வட்டி வீதங்கள் அடிப்படையில், உள்நாட்டு சந்தைகள் மற்றும் வெளிநாட்டு சந்தைகள் நிலைமைகள் கடந்த பல காலங்களாக சந்தை வட்டி வீதங்களின் அதிகரிப்பினை விளைவித்தன. எவ்வாறாயினும், நாணய நிலைமைகள் பொருளாதார நடவடிக்கைகளில் உகந்த தன்மையுள்ளதாக அமைந்துள்ளதாக உறுதிப்படுத்தி இந்நிலைமைகள் இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து, வணிக வங்கிகளில் ஒட்டுமொத்த கடன்வழங்கல் பட்டியலுக்கு தொடர்புடையதான வட்டி வீதங்களின் அசைவினைப் பிரதிபலிக்கின்ற சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் கடந்த பல ஆண்டுகளாக 15 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்படுகின்றது.


உள்நாட்டு வட்டி வீதங்கள்





தரவு மூலம்: இலங்கை மத்திய வங்கி

எனினும், 2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் உறுதிப்படுத்தப்பட்டு வருகின்ற முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களுடனும் பன்னாட்டு ரீதியிலான படிப்படியான நாணய நிலைமைகளின் இறுக்கம் மற்றும் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தளர்த்துகின்ற படிமுறைகளும் தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் நாணயக் கொள்கை மீது கணிசமான அழுத்தங்களை விளைவித்தன. எனினும், மிக அண்மையில், உலகளாவிய பொருளாதாரச் செயற்பாடுகள் மெதுவடைந்தமை மற்றும் உலகம் எதிர்கொண்டு வருகின்ற புவிசார் பிரச்சினைகள் என்பன முக்கிய பகுதியினைக் கொண்டிருக்கின்றன. அத்தகைய மாற்றங்கள் தொடர்ந்தும் சவால்களை தோற்றுவிப்பதுடன் இலங்கை மத்திய வங்கியானது தொடர்ச்சியான முறையில் அதனுடைய கொள்கை அமைப்புக்களைக் கவனமாக அமைத்துக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது


தெரிந்தெடுக்கப்பட்ட முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் - கொள்கை வட்டி வீதங்கள்




தெரிந்தெடுக்கப்பட்ட கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் - கொள்கை வட்டி வீதங்கள்




தெரிந்தெடுக்கப்பட்ட தெற்காசிய நாடுகள் - கொள்கை வட்டி வீதங்கள்




தரவு மூலங்கள்: மத்திய வங்கிகளின் வெப்தளங்கள்



*இராஜகிரிய, சிறி ஜெயவர்த்தனபுர மாவத்தை, இல. 58இல் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கி அச்சகத்தில் அச்சிடப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் தொடர்பூட்டல் திணைக்களத்தினால் வெளியிட்டது.*